தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி

முனைவர் பட்ட ஆய்விற்குரிய **(Ph.D)** முன்ஆய்வுச் சுருக்கம்

ஒப்படைப்பு

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

செல்வி. ச. மோகனப்பிரியா

பதிவு எண்: **19PHTMF002**

ஆய்வு நெறியாளர்

முனைவர் ச. குருஞானாம்பிகா, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்க்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043

மார்ச்சு 2024

தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி

பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களது வாழ்க்கைச் சூழலையும் எடுத்துரைப்பதாக இலக்கண இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன. தமிழில் தோன்றிய தொன்மையான முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்தை மூலநூலாகக் கொண்டே இன்று வரை பல இலக்கண நூல்கள் தோன்றி இருக்கின்றன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் முதலிய அதிகாரங்களைக் கொண்டது. பொருளதிகாரம் தமிழரின் வாழ்க்கை முறையை அகம், புறம் எனப் பிரித்து எடுத்துரைக்கிறது. தொல்காப்பியப் புறத்திணையியல் போருக்கு முன் வேந்தர்கள் கடைபிடித்த போர் நெறிமுறைகளையும், போருக்குப் பின் வேந்தர்கள் கடைபிடித்தவற்றையும் எடுத்துரைத்துள்ளது.

தமிழில் பதினெண்மேல்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்ற இலக்கியங்கள் பண்டையத் தமிழர்களின் வாழ்வை எடுத்துரைக்கிறது. பண்டைய கால மக்கள் வீரத்தையே பெரிதென மதித்தனர். வீரம் நிறைந்தவனே சிறந்தவனாகக் கருதப்பட்டான். போரில் காயம்பட்ட நாளே சிறந்த நாளாகக் கருதிக் கொண்டாடினர். சிற்றிலக்கியங்கள், அரசர்கள், வள்ளல்கள், இறைவன் மேல் பாடப்பட்டத்தாகும். சிற்றிலக்கியங்கள் வடமொழியில் பிரபந்தங்கள் என்று கூறப்படுகிறது. அச்சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக பரணி இலக்கியங்கள் அமையப்பெறுகின்றன. அவற்றுள் முதன்மையானதாகக் கருதப்படுவது கலிங்கத்துப்பரணி ஆகும். சோழ அரசரிடம் கலிங்க அரசன் தோற்றதையும், கலிங்க மண்ணை வெற்றிக் கொண்டதையும் எண்ணிப்பாடுவது கலிங்கத்துப்பரணி. முதலாம் குலோத்துங்க சோழனின் அவைப் புலவரான செயங்கொண்டாரால் பாடப்பட்டது. சோழனின் வெற்றியினைப் பறைசாற்றுகிறது. தொல்காப்பியர் குறிப்பிட்டப் போர்முறைகளை கலிங்கப்போரில் பின்பற்றிய விதத்தினை ஆய்வில் அறியமுடிகிறது. தொல்காப்பியமும், சிற்றிலக்கியமும் இரு வேறு காலகட்டத்தைக் கொண்டது. தொல்காப்பியப் புறத்திணை மற்றும் கலிங்கத்துப்பரணி ஆகியவற்றில் சொல்லப்பட்ட போர்க் குறித்தும், போர்க் கருவிகள் குறித்தும், இன்றைய காலப் போரின் தன்மைக் குறித்தும் ஆராய்வதாக ஆய்வானது அமைகிறது.

ஆய்வுப் பொருள்

‘தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி’ என்னும் பொருண்மையில் ஆய்வுத் தலைப்பானது அமைந்துள்ளது.

ஆய்வு நோக்கம்

தொல்காப்பியம், மக்களின் அகப்புற வாழ்க்கைக்கான இலக்கணத்தை எடுத்துரைக்கிறது. பிற்காலத்தில் எழுந்த சிற்றிலக்கியமான கலிங்கத்துப்பரணி புறஇலக்கணம் வரையறுத்தப் போர் முறைகளை விளக்குகிறது. இந்த இரு நூல்களிலும் கூறப்பட்ட போர் முறையை ஆராய்தலும், அறிதலும் ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

கருதுகோள்

பரணி இலக்கியமான கலிங்கத்துப்பரணி சோழருக்கும், கலிங்கருக்கும் இடையேயான போரினைக் கூறுவதாக அமைகிறது. கலிங்கப்போர் முறைகள், தொல்காப்பியப் புறத்திணை மரபுகளோடு பொருந்தி உள்ளதை எடுத்துரைப்பதே ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள புறத்திணையியலும் (30 நூற்பாக்கள்), சிற்றிலக்கிய நூலான கலிங்கத்துப்பரணியும் (599 தாழிசைகள்) ஆய்வு எல்லைகளாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

சோழர்களின் வரலாற்றுச் செய்திகளைக் கூறுவதால் வரலாற்று முறை அணுகுமுறையும், தொல்காப்பியப் புறத்திணைகளையும் கலிங்கத்துப்பரணியையும் விளக்கிக் கூறுவதால் விளக்கமுறை அணுகுமுறையும், கலிங்கத்துப்பரணியில் புறத்திணைகளைப் பகுத்துக் கூறுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், புறத்திணைகளை ஒப்பிட்டுக் கூறுவதால் ஒப்பிட்டு அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது.

ஆய்வு ஆதாரங்கள்

"தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி" என்னும் ஆய்விற்குத் தொல்காப்பியமும், கலிங்கத்துப்பரணியும் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

தொல்காப்பியம், கலிங்கத்துப்பரணி நூல்கள் சார்ந்த ஆய்வுக் கோவைகள், திறனாய்வு நூல்கள், அகராதிகள், நிகண்டுகள் மற்றும் ஆய்வேடுகள் போன்றவை இவ்வாய்விற்குத் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

நூல்கள்:

கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி – ந. சுப்புரெட்டியார்

தொல்காப்பியப் புறத்திணையியல் உரை வளம் - க. வெள்ளைவாரணனார்

கலிங்கத்துப்பரணியும் போர்க்காட்சிகளும் - முனைவர். கோ. சுரேஷ்

ஆய்வுகள்:

தொல்காப்பிய வழி கலிங்கத்துப் பரணி - ஓர் ஒப்பாய்வு – செவியர் ஜான் - 2012 – மெட்ராஸ் பல்கலைக்கழகம்.

ஆய்வுக் கட்டுரைகள்

கலிங்கத்துப்பரணியில் களச்சிறப்பு – முனைவர் பட்ட ஆய்வாளர் - ந. அகிலா

தொல்காப்பியம் காட்டும் பண்டையக் காலப் போர் முறைகள் (புறத்திணையியலும் சமுதாயமும்) – முனைவா. பா. பிரபு

ஆய்வுப் பகுப்பு

“தொல்காப்பியப் புறத்திணையியல் நோக்கில் கலிங்கத்துப்பரணி” என்னும் ஆய்வில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

- **இயல் - 1 – கலிங்கத்துப்பரணியும் சோழா் வரலாறும்**
- **இயல் - 2 – தொல்காப்பியப் புறத்திணை மரபுகள்**
- **இயல் - 3 – போா் நெறிமுறைகளும் போா்ப்படைகளும்**
- **இயல் - 4 – போரும் போா்க்களமும்**

இயல் - 1

சிற்றிலக்கியமும் கலிங்கத்துப்பரணியும்

சிற்றிலக்கியம்

வடமொழியில் பிரபந்தங்கள் எனப்படும் இலக்கியங்கள் தமிழில் சிற்றிலக்கியம் எனப்படுகின்றன. சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும். இது இறைவன், மன்னன், வள்ளல், மக்கள் முதலிய இவர்களுள் ஒருவரைத் தலைவராகக் கொண்டு பாடப்படும் இலக்கியம் ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருட்கள் ஒன்றைப் பற்றி கூறுகிறது. குறைந்த பாடல் எண்ணிக்கையைக் கொண்டு அமைந்ததாகும். பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கிய வகைகளின் இலக்கணத்தைக் கூறுகின்றன.

பரணி இலக்கியம்

தமிழர்களின் அக வாழ்க்கையோடு புற வாழ்க்கையை விரிவாகப் பாடுபவவை பரணி இலக்கியம் ஆகும்

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி”

(இலக்.வி:839)

என்று இலக்கண விளக்கப் பாட்டியல் விளக்குகிறது. போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரனைப் புகழ்ந்து பாடுவது பரணி ஆகும். பரணி நாளில் கொற்றவைக்குப் படையலிட்டுப் போர் வெற்றியை விழாவாக கொண்டாடுவதாகப் பரணி இலக்கியம் அமைகிறது.

கலிங்கத்துப்பரணி

கிபி 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கலிங்கத்துப்பரணி நூலே முதல் பரணி நூலாகும். கலிங்கநாடு என்பது இன்றைய ஒரிசா மாநிலம் ஆகும். 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அனந்தவர்மன் சோழ மன்னருக்குத் திறைக் கொடுக்க மறுக்கிறார். ஆனால் சோழ அரசன் குலோத்துங்கனின் ஆணைப்படி படைத்தலைவர் தொண்டைமான் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்று அனந்தவர்மனை வென்றார். கலிங்கப்போரும், போர்க்களமும் உள்ளடக்கிய நிகழ்வுகளின் தொடர்ச்சியை கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது. பிற்காலத்தில் எழுந்த பரணி நூல்களுக்கு வழிகாட்டியாக அமைந்த கலிங்கத்துப்பரணி நூலின் ஆசிரியர் செயங்கொண்டார். கடவுள் வாழ்த்துத் தொடங்கி களம்பாடியது வரை மொத்தம் 13 அதிகாரங்களில் பாடியுள்ளார். முதலாம் குலோத்துங்கனின் அவைக்களப்புலவராக இருந்தவர் செயங்கொண்டார்.

சோழா் வரலாறு

பழந்தமிழ் நாட்டினை ஆட்சி செய்த மூவேந்தர்களுள் இரண்டாவதாக வைத்துப் போற்றப்படுபவர்கள் சோழர்கள். இவர்கள் பண்டைய காலந்தொட்டே தமிழகத்தினை ஆட்சி செய்து வரும் ஒரு பிரிவினராவர். சோழ அரசர்களின் எல்லையின்கீழ் ஆட்சி பெற்றிருந்த பகுதிகள் அனைத்தும் **“சோழநாடு”** என்றழைக்கப்பட்டது. சோழர்களின் குலம் வளமைமிக்க காவிரி ஆற்றின் பகுதியிலேயே தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகிறது. கிறித்துவுக்கு முந்தைய நூற்றாண்டுகளில் சோழர்குலமானதுப் பெருமைமிக்கக் குலமாக விளங்குகிறது. இரண்டாம் நூற்றாண்டையும் அதற்குப்பின் சோழர்கள் புகழ் பெற்ற நூற்றாண்டையும் இரண்டாகப் பிரிக்கலாம். அவை,

1. முற்காலச் சோழர்கள்
2. பிற்காலச் சோழர்கள்

எல்லைகள்

வடக்கு ⟶ ஒரிசா வரை

தெற்கு ⟶ இலங்கையின் வடக்குப்பகுதியும் மாலத்தீவும்

கிழக்கு ⟶ ஜாவா, சுமத்ரா, மலேசியா வரை

இராஜேந்திர சோழனின் காலத்தில் சோழா்களின் எல்லையான வட இந்தியாவிலுள்ள கங்கைக் கரை வரை சென்று பாடலிபுத்திர மன்னனான மகிபாலனைத் தோற்கடித்து, அத்துடன் மலாய் தீபகற்பத்திலுள்ள கடாரம், ஸ்ரீ விஜயம் போன்ற நாடுகளைத் தோற்கடித்துக் கைப்பற்றினான். சோழா்களின் தலைநகரமாக தஞ்சாவூா் திகழ்ந்தது. அவா்களின் கொடி, புலிக்கொடியாகவும் அவா்களின் மாலை அத்தி மாலையாகவும் இருந்திருக்கின்றது.

முதலாம் குலோத்துங்க சோழன்

பிற்காலச் சோழருடைய வம்சாவழியில் வந்த முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) வரலாறு கலிங்கத்துப்பரணி வழி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. முதலாம் குலோத்துங்கன் இளமையில் தன் தாய்மாமன் வீரராசேந்திரனுக்கு கீழைச் சாளுக்கியப் போர்களிலும், கடாரம் படையெடுப்புகளிலும் உதவி செய்தான். இவனுக்குப் போர்த்துறையில் பயிற்சி இருந்தது என்பதை கலிங்கத்துப்பரணி காட்டுகின்றது. இதனை,

> **"கேழல், மேழி, கலை, யாளி, வீணை, சிலை,**
>
> **கெண்டை, என்று இனைய பல்கொடி,**
>
> **தாழ, மேருவில் உயர்த்த செம்பியர்**
>
> **தனிப்புலிக் கொடி தழைக்கவே"**

(கலிங்கம்: பா: 18)

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது. இவனுடைய பேரரசு தெற்கே கன்னியாகுமரியிலிருந்து வடக்கே மகாநதிவரையிலும் பரவியிருந்துத. துங்கபத்திரை ஆறு சோழ-மேலைச் சாளுக்கியப் பேரரசுகளுக்கு எல்லையாக அமைந்தது. இவன் இப்பேரரசை 45 ஆண்டுகளுக்குத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். காலிங்கராயன் அல்லது நாலோகன், இலங்கேசுவரன் ஆகியோரெல்லாம் இவனுடைய புகழ்பெற்ற சில அதிகாரிகளாவர். சிவபெருமானிடத்து ஆழ்ந்துப் பற்றுடையவன், இவன் சிதம்பரம் கோயிலில் பேரம்பலத்தைச் செப்புத் தகட்டால் வேய்ந்து, அக்கோவிலைச் சுற்றிப் பெரிய திருச்சுற்று வழியை நிறுவி, ஒரு நூற்றுக்கால் மண்டபத்தையும், ஒரு தேவார மண்டபத்தையும், சிவகாமி அம்மன் கோயிலையும் கட்டி, இவை எல்லாவற்றினும் மேலாக, இவன் தேவாரத் திருப்பதிகங்களெல்லாம் செப்பேடுகளில் எழுதப்படுவதற்கும் அவ்வேடுகள் அக்கோவிலில் வைக்கப்படுதற்கும் ஏற்பாடு செய்தான். பல்வேறு நிலப் பகுதிகளின் தலைவர்களும் இவனுக்குப் பற்றுறுதியுடன் திறை செலுத்தினர். இவ்வாறு சிற்றிலக்கியம் பற்றியும், கலிங்கத்துப்பரணி பற்றியும் பிற்காலச் சோழருடைய வம்சாவழியும், காலமுறையும், முதலாம் குலோத்துங்கன் பற்றிய செய்திகளையும் கலிங்கத்துப்பரணியோடு ஒப்பீட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இயல் – 2

தொல்காப்பியம் காட்டும் புறத்திணை மரபுகள்

தமிழ் இலக்கண மரபில் தனித்த இடம்பெற்றுள்ள தொல்காப்பியம் அகமரபுகளை எடுத்துக் கூறுவதோடு புறத்திணை மரபுகளையும் அடையாளப்படுத்துகிறது.

தொல்காப்பியத்தின் தொன்மை

- இன்று கிடைக்கப்பெறும் பழமையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம் எழுத்து,
- சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களில் 9 இயல்களைக் கொண்டும், 1610 நூற்பாக்களைக் கொண்டும் அமைந்ததாகும்.

புறத்திணைகள்

- அகத்திற்குப் பிறகு தொல்காப்பியம் புறத்தை விளக்குகிறது. காதல் தவிர பிறவற்றை கூறும் புறத்திணைகளில் ஏழு திணைகள் இடம் பெற்றுள்ளன.
- அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பவையாகும்.

அகத்திணைக்குப் புறனாக அமையும் புறத்திணைகள்

அகத்திணை – புறத்திணை

அகத்திணையும் ஏழு புறத்திணையும் ஏழென வகுக்கப்பட்ட இலக்கணத்தில் ஒவ்வொரு அகத்திணைக்கும் ஒவ்வொரு புறத்திணைப் புறமாக அமைந்திருக்கிறது.

அகத்திணை – புறத்திணை

- குறிஞ்சி என்ற அகத்திணைக்கு வெட்சி என்ற புறத்திணையும்
- முல்லை என்ற அகத்திணைக்கு வஞ்சி எனும் புறத்திணையும்
- மருதம் என்ற அகத்திணைக்கு உழிஞை என்ற புறத்திணையும்
- நெய்தல் என்ற அகத்திணைக்குத் தும்பை என்ற புறத்திணையும்
- பாலை என்ற அகத்திணைக்கு வாகை என்ற புறத்திணையும்
- பெருந்திணை என்ற அகத்திணைக்குக் காஞ்சி என்ற புறத்திணை
- கைக்கிளை என்ற அகத்திணைக்குப் பாடாண் என்ற புறத்திணையும் புறனாக அமைந்திருக்கின்றன

வெட்சித் திணை

நிரை கவரச் செய்தல் வெட்சித்திணை ஆகும். வெட்சித்திணை குறிஞ்சித் திணைக்கு புறனாக அமைகின்றது. வெட்சியுடன் கரந்தையும் சேர்ந்து தொல்காப்பியர் ஒரே திணையாக கூறியுள்ளார். ஆநிரைக் கவர்தலே போரின் தொடக்கமாக அமைகிறது. வெட்சிப் பூவை அணிந்து நிரைக் கவரச் செல்வர். ஒரு நாட்டின் மீது போர்த் தொடுக்க எண்ணும் வேந்தர் அந்நாட்டின் மீது போர்த் தொடுக்கப் போவதை அறிவிக்கும் வாயிலாக ஆநிரைக் கவர்தல் அமைகிறது. வெட்சித்தினை 14 துறைகளை உடையது. அவற்றுள்,

⇒ **பாக்கத்து விரிச்சி**

⇒ **கொற்றவை நிலை**

ஆகிய துறைகள் கலிங்கத்துப்பரணியில் கூறப்பட்டுள்ளது.

வஞ்சித் திணை

வஞ்சி என்பது மன்னரது மண்ணாசைக் காரணமாக நடைபெறும் போராகும். ஒரு மனிதன் தன்னிடம் உள்ள நிலப்பரப்பு போதாமல் பிற நாட்டு வளங்களையும், நிலத்தையும் கைப்பற்ற விரும்புவது வஞ்சித் திணையாகும். மண் ஆசையால் பகை வேந்தன் ஒருவன், தன் மேல் படையெடுத்து வருவதற்கு முன்பே தான் அவனை வெல்லுவதற்கேற்ற காலம், இடம், வழி முதலியவற்றை எண்ணி, அவனது நாட்டின் மேல் போர்த்தொடுக்கக் கருதிப் புறப்பட்டுச் செல்லுதல் வேந்தனது கடமையாகும். இக்கடமையினை உள்ளத்துள் கொண்டு ஒழியாத மண்ணாசையுடைய பகை வேந்தனைப் போரின் பொருட்டு அழிக்கக் கருதி அவன் அஞ்சும்படி படையுடன் மேல் செல்லல் வஞ்சித்திணையாகும் என்கிறார் தொல்காப்பியனார். வஞ்சித் திணையின் துறைகளாக மொத்தம் பதிமூன்று துறைகளைக் கூறியுள்ளார். இவற்றுள்,

⇒ **இயங்குபடை அரவம்**

⇒ **எரிப்பரந்து எடுத்தல்**

⇒ **பேராண்பக்கம்**

⇒ **தழிஞ்சி**

போன்ற துறைகள் கலிங்கத்தப்பரணியில் இடம்பெற்றுள்ளது.

உழிஞைத் திணை

அரணை முற்றுகையிட்ட மாற்று வேந்தனை வெற்றி கொண்டு அரணைக் காப்பதே உழிஞைத் திணையாகும். அவ்வாறு மதிலை வளைக்கும் போது குடை, வாள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை புறவீடு அனுப்புதலும், மதிலின் வெளியே தங்குதலும், தோற்றபடைப் பெருக்கம் பேசுதலும், காவற்காட்டை கடத்தலும், கிடங்கில் போரிடுதலும், மதில் மீது ஏணி சார்த்திப் போரிடுதலும் நடைபெறும். அதன்பின் உள்ளே குதித்து உள்ளிருப்போரை வென்று அரணைக் கைப்பற்றுவதும் மதிலை அழித்து, கழுதை ஏர்பூட்டி உழுது வரகு, எள், கொள்ளு முதலியனவற்றை விதைத்தலும், முடிசூடிக் கொள்ளுதலும் நடைபெறும். இதனைத் தொல்காப்பியர் இருபது துறைகளாகப் பகுத்துக் கூறியுள்ளார். அவற்றுள்,

⇒ **திறல்பட ஒருதான் மண்டிய குறுமை**

என்ற ஒரு துறை மட்டுமே கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றுள்ளது. இதனை, இளம்பூரணார் தன் உரையில் குற்றுழிஞை என்று குறிப்பிட்டுள்ளார்.

தும்பைத் திணை

இரு அரசர்கள் ஒரே போர்க்களத்தில் போரிடுவது தும்பைத் திணையாகும். போர்ப் புரிவதையே தன் வலிமையாகக் கருதி, பகை அரசனின் வலிமையை அடக்குவதாக

தும்பைத்திணை அமைகிறது. குருதியால் சிவந்த நிறத்தைப் பெற்றிருப்பது போர்க்களம். அதன்கண் தன்னுடைய வலிமையால் பகைவரை வீழ்த்த நினைக்கும் மறவர் அதற்கென பசிய நிறம் கொண்ட இலையோடு கூடிய தும்பையைத் தலையிலே சூடுவர். இந்நிலையை எடுத்துரைப்பது தும்பையாகும். இத்தும்பைத்திணை பன்னிரண்டு துறைகளை உடையது. அவற்றுள்,

⇒ **இருவர் தலைவர் தபுதிப் பக்கம்**

⇒ **நூலிலாட்டு**

ஆகிய மூன்றும் கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றுள்ளது.

வாகைத் திணை

ஒரு அரசன் தான் பெற்று வெற்றியின் சிறப்பை அறிந்து கொள்ளத் துணைபுரிவது வாகைத்திணையாகும். வாழ்க்கையின் வெற்றித் தன்மையினை உறுதி செய்யக்கூடியதே வாகைத்திணை. அரசன் மட்டுமல்லாமல் மற்ற தொழில் புரியும் அனைவரின் சிறப்பினையும், வெற்றியையும் அறியும் வகையில் பாடுவதே வாகைத்திணையாக அமைகின்றது. வாகைத் திணை என்பது மேம்பட்ட வெற்றி நிலையைக் குறிப்பதாகும். பார்ப்பனப் பக்கம், அரசர் பக்கம், வணிகர் பக்கம், வேளாண் பக்கம், அறிவின் பக்கம், தாபதப் பக்கம், பொருளர் பக்கம் ஆகியன வாகைத்திணையின் வகைகள். வாகைத் திணையின் துறைகளாகத் தொல்காப்பியர், பதினெட்டு துறைகளைக் கூறுகிறார். அவற்றுள்,

⇒ **அவிப்பலி**

என்னும் துறை மட்டுமே கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றுள்ளது.

காஞ்சித் திணை

காஞ்சித்திணை நிலையற்ற நிலையை கூறுவதாக அமைகிறது. ஒருவன் வீடுபேறு அடைவதற்காக அறம், பொருள், இன்பம் என்ற நிலைகளைக் குறித்தும் உயிரும், உடலும், செல்வமும், இளமையும் ஆகியவற்றின் நிலையில்லாத் தன்மைப் பற்றிக் குறிப்பிடுவதும் காஞ்சித் திணையாகும். காஞ்சித் திணையின் துறைகளாக இருபது வகைகளைத் தொல்காப்பியர் உரைக்கிறார். இவற்றுள் முதலில் வரும் பத்து விழுப்பக் காஞ்சி என்றும் அடுத்து வரும் பத்து விழுமக் காஞ்சி என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

விழுப்பக் காஞ்சி: (மேன்மை)

பெருங்காஞ்சி, முதுகாஞ்சி, மறக்காஞ்சி, பேய்க் காஞ்சி, முன்னைக் காஞ்சி, வஞ்சினக் காஞ்சி, தொடாக் காஞ்சி, ஆஞ்சுக் காஞ்சி, மகட்பாற் காஞ்சி, முடிந்த காஞ்சி ஆகியன விழுப்பக் காஞ்சியின் வகைகளாகும்.

விழுமக் காஞ்சி: (துன்பம்)

மயக்கக் காஞ்சி, துன்பக் காஞ்சி, மூதானந்தக் காஞ்சி, முதுபாலை காஞ்சி, கையறுநிலைக் காஞ்சி, தபுதார நிலைக் காஞ்சி, தாபத நிலைக் காஞ்சி, பாலைநிலக் காஞ்சி, தலைப்பெயல் நிலைக் காஞ்சி, காடுவாழ்த்துக் காஞ்சி என்பன விழுமக் காஞ்சியின் வகைகள் ஆகும்.

⇒ **பேஎய்ப் பக்கம்**

⇒ **தலையொடு முடிந்த நிலை**

⇒ **பையுள்**

ஆகிய இம்மூன்றுத் துறைகளும் கலிங்கத்துப்பரணியில் பயின்று வந்துள்ளது.

பாடாண் திணை

பாடாண் திணை என்பது போரில் ஒருவர் பெற்ற வெற்றியை மட்டும் பாராட்டிக் கூறுவதன்று, மன்னனின் கொடைத் திறமையும், மன்னன் நாட்டு மக்களிடம் நடந்து கொள்ளும் திறனையும் பாராட்டிக் கூறுவதாகும். திணையில் மன்னரை வாழ்த்திப் பாடும் மங்கல வாழ்த்துப் பாடல்களே பெரும்பாலும் அமைகின்றன. ஒருவன் போரிட்டுப் பெறலாகும் சிறப்பினை மட்டுமேயல்லாமல் கொடையாலும், கொள்கை நலத்தாலும் பெறும் சிறப்புகளைப் பாராட்டுவதும் பாடாண் என்றே பெயர் பெறும் எனக் கொண்டு, அதற்கேற்ற இலக்கண இலக்கியங்களை விரிவாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். பாடாண்திணை எட்டு வகைப்படும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய ஆறு திணைகளிலும் பொதுவாகத் தலைவனைப் பாடுவது பாடாண் திணையாகும். பாடாண் என்பதைப் புகழ்ந்து பாடுதல் என்றும் கூறுவர். பாடு- ஆண்- திணை- பாடாண் திணை எனப் பகுக்கலாம். ஓர் ஆண்மகனின் சிறப்பினைக் கூறுவது பாடாண் திணையாகும். ஒருவனின் ஆளுமை, வீரம், கொடை போன்றவற்றைப் புகழ்ந்து பாடுவது பாடாண்திணையாகும். பாடாண் திணைக்கென எந்தப் பூவும் குறிப்பிடப்படவில்லை. பாடாண்திணையில் மொத்தம் இருபத்தி மூன்று துறைகளைக் குறிப்பிட்டுள்ளார் தொல்கப்பியர். அவற்றுள்,

⇒ **கொற்ற வள்ளை**

⇒ **பெருமங்கலம்**

⇒ **குடைநிழல் மரபு**

ஆகிய துறைகள் கலிங்கத்துப்பரணியில் இடம்பெற்றுள்ளது.

தொல்காப்பியப் புறத்திணையில் அமைந்துள்ள துறைகளை கலிங்கத்துப்பரணியில் அமைந்திருக்கும் துறைகளோடு பொருத்தி பார்த்து ஆராயும் வகையில் இவ்வியலானது அமைக்கப்பட்டுள்ளது.

இயல் 3

போர் நெறிமுறைகளும் போர்ப்படைகளும்

தமிழர்கள் வீரத்தின் அடையாளமாகப் பெரிதும் விரும்பிய போருக்கான இலக்கணத்தினைத் தொல்காப்பியம் புறத்திணை மரபுகளாக எடுத்துரைக்கிறது.

மனிதகுல வரலாற்றைப் போர்களே பெரும்பாலும் தீர்மானித்திருந்தன. வீரர்களுக்குத் தங்கள் வீரத்தைக் களத்தில் மெய்ப்பிப்பது என்பது தலையாயக் கடமையாக அமைந்திருந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட போர்களும் அற நெறிமுறைகளோடு நடந்தன. போர்க்களத்தில் மன்னர்கள் பல்வேறு படைகளைப் பயன்படுத்தியிருந்தனர்.

போருக்கான காரணங்கள்

- ஆநிரைகளைக் கவர்தலும் மீட்டலும் போர் புரிய முதன்மைக் காரணங்களாகத் தொடக்கத்தில் இருந்தன.
- பிறகு ஒருவர் மீது கொண்ட பகையினாலும், மண்ணாசையின் காரணமாகவும், ஒருகுலத்து வேந்தருக்குள்ளே உரிமையின் காரணமாகவும், தன்மானத்தின் காரணமாகவும், பொறாமையின் விளைவாலும், பெண்ணாசையின் காரணமாகவும், இனமானத்தின் பேரிலும், தலைமைத் தாங்குகிற விருப்பத்தின் பேரிலும், வீரத்தின் மீதான விருப்பத்தின் காரணமாகவும், பெருமைக்கான விருப்பம் ஆகிய காரணங்களால் போர்கள் நிகழ்ந்தன.

போர் அறங்கள்

- தமிழர்களின் மரம் அறம் சார்ந்ததாகும். அற நெறிகளை அடிப்படையாக வைத்து போர் நிகழ்ந்தன.
- ஒரு மன்னன் பகைநாட்டின் மீது படை எடுக்க விரும்பினால் அந்நாட்டு மன்னனுக்கு பறையறிவித்து உணர்த்துதல், அந்தணர், அறவோர், பசுக்கள், பெண்கள் முதியோர், குழந்தைகள், உடல் நலிவுற்றோர் ஆகியோர்களை விடுத்து போர் மேற்கொள்ளுதல், புறமுதுகு காட்டியவர் மீது போர்ப்படைக் கொண்டு அழிக்காமல் இருத்தல் ஆகியவற்றை அறங்களாகக் கொண்டு போர்கள் நடந்தன.

போர்ப்படைகள்

- ஒரு நாட்டின் அரசியலுக்கு அடிப்படை வலுவாக அமைவது படைகளாகும்.
- யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்னும் நான்கு வகை படைகளே முக்கிய படையாக கருதப்பட்டன.
- படைகள் போருக்குச் செல்லும் போது முதலாவதாக காலாட்படை, இரண்டாவதாக குதிரைப்படை, மூன்றாவதாக தேர்ப்படை, நான்காவதாக யானைப்படையும் செல்லும்.
- இதைத் தவிர கடலில் போர் புரிய கடற்படையும், பாலை நிலத்தில் போர் புரிய ஒட்டகப்படையையும் பயன்படுத்தியிருந்தனர்.

- படைகளுள் அதிக வலிமைமிக்கப் படையாக யானைப்படை கருதப்பட்டது. இப்படையானது, வேலைகள், கூடாரங்கள், மதில்கள், காவற்காடு போன்றவற்றைத் தகர்ப்பதற்கும், அழிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. ஒரு போரின் பெரும்பாலான அழிவை யானைப்படைகளே ஏற்படுத்தின.
- போருக்குப் புறப்பட்டுச் செல்லும் யானைகள் மதநீர் பொழியும் வகையில் பிளிறிக் கொண்டே சென்றதை கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது.
- **“கன வரையொடு முனைத்த போல் கட கரியொடு கரி முனைக்கவே”** என்று மதம் பொழியும் யானைகளோடு யானைகள் போர் புரிவது, பெரிய மலைகளோடு மலைகள் போர் புரிவது போல் இருந்ததாகக் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.
- அதிவிரைவாகச் செல்லக்கூடிய படையாகக் குதிரைப்படை கருதப்பட்டது. வாள்போர், வில்போர், வேல்போர் போன்ற போர்களைக் குதிரை மீது அமர்ந்து செய்வர்.
- அழகான வேலைப்பாடுகளுடன் குதிரை பூட்டப்பட்ட தேர்படையானது, போர்க்காலத்தில் பல்வேறு வீரர்களை வீழ்த்தக்கூடியதாக இருந்துத. தேரில் நின்று போர் புரியும் வீரர்கள் வில் வீரர்களாகவும், வாள் வீரர்களாகவும் காணப்பட்டனர் என்று கலிங்கத்துப்பரணி கூறுகிறது.
- காலாட்படை பண்டைய காலம் முதல் இன்று வரை படைத்துறையின் ஒரு அடிப்படைப் பிரிவாக இருக்கிறது. வீரர்கள் தங்களது உயிரைத் துறந்தாவது புகழை ஈட்ட வேண்டும் என்று தங்கள் உயிரையும் கொடுக்க எண்ணினர் எதற்கும், அஞ்சாமல் துணிவாக எதிரிப்படைகளை விழித்தனர் என்றும் காலாட்படை வீரர்களின் சிறப்பினை கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது. கலிங்கநாடு இன்றைய ஒரிசா மாநிலமாக இருப்பதால் அது பாலை நிலமாகும். பாலை நிலத்தில் போர்புரியத் தகுந்த படையாக ஒட்டகப்படை அமைந்திருந்தது
- போரில் விரைந்து ஓய்ந்து போகாத படையாக ஒட்டகப்படை விளங்கியிருக்கிறது. அதிக வெப்பம் காணப்பட்டாலும் ஒட்டகப்படையானது போரின் தன்மையினைக் குறைக்காது. முதலாம் குலோத்துங்கசோழன் கலிங்கத்துப் போரில் கருணாகரத் தொண்டைமானின் தலைமையில் ஒட்டகப்படையினைப் பயன்படுத்தியதாக அறியமுடிகிறது.

ஒட்டகப்படையினை பற்றி கலிங்கத்துப்பரணியில்,

“ஒட்டகங்கள், யானைகள், வால்

உயர்த்த மா, அழிந்த போர்

விட்டு அகன்று போகிலாது

மீள்வ போலும் மீளுமே”

என்று பாடப்பட்டுள்ளது.

போர்க்கருவிகள்

பண்டைய காலங்களில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தன்னைத் தாக்கவரும் விலங்குகளை விரட்டவும் என, சிறுய பெரிய கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் இருவகைப்பட்டன. அவை,

1.கைக்கொள்படை

2.கைக்கொள்ளாப்படை

போர் ஏற்படுவதற்கானக் காரணங்கள், போரில் பின்பற்றப்பட்ட அறங்கள், போரில் பயன்படுத்திய படைகள் மற்றும் கருவிகள் போன்றவற்றைக் கலிங்கத்துப்பரணி வழி எடுத்துரைக்கும் நோக்கில் இவ்வியலானது அமைக்கப்பட்டுள்ளது.

இயல்-4

போரும் போர்க்களமும்

போர் நடைபெறுகிற களம் குறித்தும், அக்களத்தில் நிகழ்கிற போரினைப் பற்றியும் இவ்வியல் எடுத்துரைக்கிறது.

போர்க்களத்தின் தோற்றம்

- போர்க்களமானது பகைவர்களைக் கொல்லும் களமாக மட்டுமல்லாமல் துயரங்களைக் கண்டு இரங்கும் களமாகவும் இருந்திருக்கிறது.
- முதலில் அரசன் போரிடும் முன் போர்க்களத்தைத் தீர்மானிப்பர். தீர்மானித்த இடத்தில் பகையரசனோடு போர் நடைபெறும். போர் முடிந்த பின்னர் போர்க்களமானது இரத்த வெள்ளத்தில் காணப்படும்.
- கலிங்கத்துப்பரணி போர்க்களமானது இரத்த வெள்ளத்தையும், வீரர்களின் அழிவையும் வீரர்களின் மனைவியர் அழும் அழுகுரலையும், வெட்டப்பட்டு கிடந்த யானைகளின் தந்தங்களையும், குதிரையின் குளம்புகளையும், பருந்தும் கழுகும் நரிகளும் உண்ட வீரர்களின் உடலையும் கண்முன்னே காட்டுகின்றன.

வீரர்கள் நிலை

போர்க்களத்தில் காலாட்படையிலுள்ள வீரர்கள், தம் திறமையை வெளிப்படுத்தி, பலர் போர்க்களத்திலேயே மாண்டு கிடந்தனர். போர்க்களமானது, இரத்த வெள்ளத்தில் வீரர்களின் கைகள், கால்கள் வெட்டப்பட்டும் கிடந்தன. மாண்டு கிடந்த வீரர்கள், முகம் மலர்ந்து கிடந்தனர் என்பதை,

விருந்தினமும் வறியவும் நெருங்கி உண்

மென்மேலும் முகம் மலரும் மேலோர் போலப்

பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்

பதுமுகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!”

(கலிங்கம்.பா.478)

கழுகுகளும், பருந்துகளும் வீரர்களின் உடலைத் தின்ன மகிழ்ச்சியோடு வந்தன. இதனை வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பது போல் இருப்பது என்று கலிங்கத்துப்பரணி குறிப்பிடுகின்றது.

மகளிர் நிலை

போருக்குச் செல்லும் வழக்கம் பெண்களுக்கு இல்லை என்றாலும், பாசறையில் இருந்து உடலில் காயம்பட்டு வரும் ஆண்களுக்கு மருந்திடுவதும், மாலையில் பாசறையைச் சுற்றி விளக்கு ஏற்றுவதும் என பல்வேறு பணிகளுக்காக பெண்கள் பாசறையில் தங்கியிருந்தனர். போர் முடிந்த பின்னர் பெண்கள் சிலர் தன் மகனையோ, தன் கணவனையோ தேடிப் போர்க்களம் சென்றனர்.

பெண்கள் போருக்குச் செல்லவில்லை என்றாலும் போருக்குச் செல்லும் தன் கணவனுக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். போர்க்களமானது அச்சம் தரும் வகையில் காணப்பட்டாலும் பெண்கள் மன உறுதியுடன் போர்க்களம் சென்றதைக் கலிங்கத்துப்பரணியின் வழி அறியமுடிகிறது.

போர்க்களத்தில் பேய்கள்

கலிங்கத்துப்பரணியில் மக்கள் உலகம், பேய்கள் உலகம் என்று இருந்திருக்கிறது. கலிங்கத்துப்பரணியில் பதின்மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஆவற்றில் பத்து அதிகாரங்கள் பேய்கள் குறித்து இடம்பெற்றுள்ளன. கடவுள் வாழ்த்தைத் தவிர நான்கு அதிகாரங்கள் மக்களைப் பற்றியும், ஐந்து அதிகாரங்கள் பேய்களின் தலைவியான காளிதேவியைக் குறித்தும் இடம்பெற்றுள்ளன. பேய்களைப் பற்றியே அதிகமாக இந்நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கலிங்கத்துப்பரணியில் காட்டப்பட்ட பேய்கள் நெடுங்காலமாக உணவின்றி வாடுகின்றன. பசியின் கொடுமையானது மனிதருக்கு மட்டுமல்லாமல் பேய்களுக்கும் இருந்து அதனால் துன்பப்படுவதை,

“புயல ளிப்பன மேலும் வளித்திடும்

பொற்க ரத்தபயன்புலி பின்செலக்

கயலொ ளித்தக டுஞ்சுரம் போலகங்

காந்து வெம்பசி யிற்புறந் தீந்தவர்”

(கலிங்கம்:பா 144)

என்று கலிங்கத்துப்பரணி பசியின் கொடுமையை எடுத்துரைக்கிறது. இன்றைய காலத்திலும் மக்கள் பசியின் கொடுமை நிலையை பல இடங்களில் அனுபவித்து வருகிறார்கள். பசியால் தினமும் தன் உயிரைவிடுபவர்களும் உள்ளனர். மனிதன் பசியால் படும் துன்பத்தை பேய்களின் மூலம் கலிங்கத்துப்பரணி எடுத்துரைக்கிறது. இவ்வாறு போர்களம் பற்றிய செய்திகளையும், போர் புரியும் வீரர்களின் நிலைகளையும், மகளிர் நிலையையும், போர்களத்தில் காணப்படும் பேய்களின் நிலைகளையும், அவைகளின் எண்ணங்களையும் ஆய்வதாக இவ்வியலானது அமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகள்

பண்டைய காலத்து மக்கள் வீரத்தினை முதன்மை பண்பாகக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். வீரத்தின் விளைநிலத்தில் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. போர்களே ஒரு நாட்டினுடைய ஆட்சியையும் மக்களுடைய வாழ்க்கையையும் தீர்மானிப்பதற்கானக் காரணிகளாகத் திகழ்ந்தன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டப் போர்களுக்கு அடிப்படை அறங்கள் பின்பற்றப்பட்டன. அறப்போர்களாக அமைந்தவையே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வரலாறும், இலக்கியமும் அறப்போர்களையே பதிவு செய்திருக்கின்றன. அவ்வகையில் கலிங்கத்துப்பரணியும் அறநெறிகளோடு போர் வியூகங்களை வகுத்துப் போர் செய்ததாக அறிய முடிகிறது.

இன்றைய காலத்தில் இந்த அறநெறிகள் போர்களில் கடைபிடிக்கப்படுவதில்லை என்பதை, சமீபத்திய போர்கள் நமக்குக் கண்முன்னே எடுத்துக்காட்டுகின்றன.

மன்னர் ஆட்சி நடந்த காலத்தில் மண்ணைக் கைப்பற்றுவதன் மூலமே ஒரு நாட்டை நிர்வாகிக்க முடியும் என்கிற காரணத்தினாலும், மண்ணாசையினாலும் போர்கள் நடைபெற்றன. இன்றைக்கு மக்களாட்சி நிலவுகிற காலத்திலும் நம்மைச் சுற்றி வாழுகிற சமூகத்தில் போர்கள் நடைபெறுவதைப் பார்க்க முடிகிறது. தமிழ் இலக்கியம் கூறுகிற அறநெறிகளை ஒப்பு நோக்கி அறியும் போது, இன்றைய உலகில் நடைபெறுகிற போர்கள் அறநெறிகளைப் பின்பற்றாமல் உயிர்களை அழிக்கிறப் போர்களாக மாறி இருக்கின்றன. இன்றைய போர்களில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உலகம் முழுவதும் இறந்துபடுவதை நாம் அறிய முடிகிறது. அத்துடன் ஒரு நாட்டில் நடைபெறுகிற போரானது ஒட்டுமொத்த உலகத்தின் பொருளாதார பாதிப்புக்கும், மனநிலை மாற்றங்களுக்கும் கூட காரணமாக அமைவதை இன்றைய போர்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

மண்ணில் வாழ்வதற்காகப் படைக்கப்பட்ட கோடான கோடி உயிரினங்களில் மனித இனமும் ஒன்று. மனிதர்கள் அல்லாத பிற உயிரினங்கள் தங்களுடைய உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்வதை நாம் கண்டிருக்கிறோம். மனித வாழ்க்கை மட்டுமே பொருளுக்காகவும், மனிதர்களுக்காகவும், ஆணவத்தினாலும், பேராசையினாலும் ஒருவரை ஒருவர் அழித்து வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் நிதர்சனமாகக் காண்கிற சூழலில் இருக்கிறோம். இத்தகு நிலையில் போரற்ற உலகமே வருங்காலத் தலைமுறைக்கு மாதிரிச் சமூகத்தைக்

கட்டமைக்கும். மனிதர்களை மனிதர்களாக வாழ வழிவகுக்கும். அத்தகைய நெறிக்காட்டுதலை இலக்கண இலக்கியத்தின் வழி உணர்தலின் பொருட்டு பண்டைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் புறத்திணையியல் வழி நின்று பெரிதும் போரை எடுத்துரைக்கிற கலிங்கத்துப்பரணியை ஒப்பிட்டு முடிவுகள் கண்டறியப்படுகின்றன.

மேலாய்வுக் களங்கள்

- ✓ அகத்திணை மரபும் கலிங்கத்துப்பரணியும்
- ✓ கலிங்கத்துப்பரணியில் பேய்களின் நிலைப்பாடுகள்
- ✓ போர்க்களத்தில் காளிதேவி வழிபாட்டு முறை
- ✓ சோழர்களின் சிறப்பும் ஆட்சிப் பெருமையும்
- ✓ முதற்குலோத்துங்கச் சோழனின் ஆளுமை பண்புகள்
- ✓ கருணகரத் தொண்டைமானின் போர்த்திறமையும் போர் வியூகங்களும்
- ✓ மொழிபெயர்ப்பு வாயிலாக தொல்காப்பியமும் கலிங்கத்துப்பரணியும்

ஆய்வுக் கட்டுரைகள்

வ.எண்	**கட்டுரைத்தலைப்பு**	**ஆய்விதழ்**	**ஆண்டு**
1.	கலிங்கத்துப்பரணியும் பேய்களும்	மணற்கேணி	மார்ச்சு – 2024
2.	கலிங்கப்போரும் வேலும்	அரிமா நோக்கு	ஒப்புதல் பெறப்பட்டுள்ளது (ஜூலை – 2024)